# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1988, செப்தெம்பர் மாதம் 15 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1988, செப்தெம்பர் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 80 தபாற் செலவு: சதம் 75

1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

[1988 செப்தெம்பர் 15 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 55/88

1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70இ என்னும் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத் தப்படுகின்றது :— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 70இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"(3) பட்டம் வழங்கும் நிறுவகத்தின் மாணவர் ஒவ்வொருவரும் ஒரு சிறப்புப் பணிப்புத் தேதிக்கு முன்னர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந் தாலும்சரி அல்லது பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தாலும்சரி, அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்தை ஏற்றங்கீகரிக்கும் 25அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வாறான அத்தகைய கல்விப் பிரிவுகளில் அந்தப் பட்டம் வழங்கும் நிறு வகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைக்கு மாத்திரமே தோற்றுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும் எனப் பயன்படும் அத்தகைய பணிப்பை அமைச்சர், பட்டம் வழங்கும் நிறுவகமொன்றுக்கு வழங்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பட்டம் வழங்கும் நிறுவகமொன்றுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பணிப்பொன்று அத்தகைய தகவுடைமை பற்றிய பிரச்சினை தொடர்பாக இறுதியானதும் முற்றானதும் ஆதல் வேண்டு மென்பதுடன், சட்ட நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலு மாகாது.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பட்டம் வழங்கும் நிறுவகமொன்றுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பணிப்பொன்று—

(அ) அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்திற்கும் அல்லது அதன் முகாமைச்சபைக்கும் அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத் தின் மாணவர்களுக்கும் ;

(ஆ) அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்திற்கும் அல்லது அதன் முகாமைச்சபைக்கும் ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்திற்கும் ; அல்லது

(இ) அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்தின் மாணவர்களுக்கும் ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்திற்கும்

இடையே உள்ள ஏதேனும் உடன்படிக்கையில் அல்லது ஏதேனும் வழக் கில் செய்யப்பட்ட இணக்கத் தீர்ப்பில் முரணாக உள்ளது எது எப்படி யிருப்பினும், பயனுடையதாதல் வேண்டும்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.